# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மேட்டூர் நகராட்சி

நிகழும் குரோதி வருடம் ஆனி மாதம் 32ம் தேதி ஆங்கில ஆண்டு **16.07.2024ம் தேதி செவ்வாய் கிழமை** காலை **11.00 மணிக்கு** மேட்டூர் நகர்மன்றத்தில் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாள் : 10.07.2024 நகர்மன்ற தலைவர்
இடம் :மேட்டூர் அணை மேட்டூர் நகராட்சி

**மன்றபொருள்**

**1.** இந்நகராட்சியில் மேற்கொண்ட வளர்ச்சி பணிகளில் ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவைவரி E–Filling செய்யும் பணி திரு.தங்கவேல் என்பவர் மூலமும், வரியில்லா இனங்களில் பிடித்தம் செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவைவரி E–Filling செய்யும் பணி தனியார் பட்டய கணக்காளர் திரு.பிரகலாத் என்பவர் மூலமும், செய்யப்பட்டு வருகிறது. மேற்காண் பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.200000/ மன்ற அனுமதிக்கு வேண்டபடுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1878/2021/பி2)**

**தீர்மான எண்.532 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது.**

2. மேட்டூர் நகராட்சி ஆணையர் பயன்படுத்தும் ஈர்ப்பு வாகன எண்.TN52V4660க்கு அவ்வபொழுது பழுதினால் ஸ்டாட் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. ஆகையால் உள்ளூர் பழுது பார்க்கும் நிறுவனத்தின் மூலம் WATER PUMP, WATER PUMP BORE REBORE WORK மரை மாற்றியது COOLING OIL மாற்றி பழுது மேற்கொள்ள உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளி ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் விவரம் | விலைப்புள்ளி | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | அண்ணாமலையார் டீசல் ஒர்க்ஸ், சேலம் கேம்ப், தங்கமாபுரிபட்டிணம், மேட்டூர் அணை–2. | 6470.00 | விலைப்புள்ளி குறைவு |
| 2. | ஓம் முருகா மோட்டார் ஒர்க்ஸ்,R.C.பிளான்ட் குஞ்சாண்டியூர், மேட்டூர் அணை–3. | 9500.00 | விலைப்புள்ளி அதிகம் |
| 3. | எம்.எம்.மோட்டார்ஸ், மேட்டூர் அணை. | 9000.00 | விலைப்புள்ளி அதிகம் |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளியில் அண்ணாமலையார் டீசல் ஒர்க்ஸ் சேலம் கேம்ப், தங்கமாபுரிபட்டிணம், மேட்டூர் டேம் என்கிற நிறுவனம் மற்ற இரண்டு நிறுவனங்கள் விட குறைவாக விலைப்புள்ளி தொகை ரூ.6470/–க்கு வழங்கியுள்ளதனை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலக பணிகள் நலன் கருதி நகர மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, அவசர அவசியத்திற்காக நகர மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி மற்றும் பட்டியல் செலவினம் மேற்கொண்டதனை மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.217/2024/இ1)

**தீர்மான எண்.533 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

3. மேட்டூர் நகராட்சிக்கு தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2023–2024 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் அவர்களின் செயல்முறைகள் கடிதம் செ.மு.ஆ.எண். 4932/2023/அ2, நாள்.01.03.2024ன்படி கீழ் கண்டுள்ள பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன்படி வார்டு எண்.30 மாதையன்குட்டை சாலை கான்கிரீட் சாலை அமைத்தல் பணி மதிப்பீட்டு தொகை ரூ.5.80/– இலட்சத்திலான பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது.

மேற்படி திட்டப்பணிக்கு 08.03.2024ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளி ஒப்பு நோக்கு பட்டியல் விவரம்.

| வ. எண் | முகவரி | விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Thangam & co, 34, Ramadas Nagar, Govindapadi. P.O,Mettur TK | (+) 0.86% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | Thiru. K.A. Kumar ,Contractor,Kunjandiyur, Gonur (P.O) Mettur Dam | (–) 0.05% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட பணிக்கு Thiru. K.A. Kumar ஒப்பந்ததாரர் என்பவர் (–)0.05% மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதனை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.569/2024/இ1)

**தீர்மான எண்.534 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

4. மேட்டூர் நகராட்சிக்கு தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2023–2024 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் அவர்களின் செயல்முறைகள் கடிதம் செ.மு.ஆ.எண். 4932/2023/அ2, நாள்.01.03.2024ன்படி கீழ் கண்டுள்ள பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன்படி வார்டு எண்–16 வடக்கு குறுக்கு

சாலையில் உள்ள மசூதி அருகில் கான்கிரீட் சாலை அமைத்தல் பணி மதிப்பீட்டு தொகை ரூ.1.80/- இலட்சத்திலான பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது.

மேற்படி திட்டப்பணிக்கு 08.03.2024ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளி ஒப்பு நோக்கு பட்டியல் விவரம்.

| வ. எண் | முகவரி | விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Thangam & co, 34, Ramadas Nagar, Govindapadi. P.O,Mettur TK | (+) 0.39% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | Thiru. K.A. Kumar ,Contractor,Kunjandiyur, Gonur (P.O) Mettur Dam | (-) 0.22% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட பணிக்கு Thiru. K.A. Kumar ஒப்பந்ததாரர் என்பவர் (-)0.22% மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியதனை ஏற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.569/2024/இ1)**

**தீர்மான எண்.535 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

5. மேட்டூர் நகராட்சிக்கு தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2023-2024 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,சேலம் அவர்களின் செயல்முறைகள் கடிதம் செ.மு.ஆ.எண். 4932/2023/அ2, நாள்.01.03.2024ன்படி கீழ் கண்டுள்ள பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன்படி வார்டு எண்.12 வாட்டார வளர்ச்சி அலுவலக பின்புறம் சாலை அமைத்தல் பணி மதிப்பீட்டு தொகை ரூ.5.00/- இலட்சத்திலான பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது.

மேற்படி திட்டப்பணிக்கு 08.03.2024ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளி ஒப்பு நோக்கு பட்டியல் விவரம்.

| வ. எண் | முகவரி | விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Thangam & co, 34, Ramadas Nagar, Govindapadi. P.O,Mettur TK | (+) 0.73% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | Thiru. K.A. Kumar ,Contractor,Kunjandiyur, Gonur (P.O) Mettur Dam | (-) 0.05% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட பணிக்கு Thiru. K.A. Kumar ஒப்பந்ததாரர் என்பவர் (-)0.05% மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியதனை ஏற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.569/2024/இ1)**

**தீர்மான எண்.536 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

6. மேட்டூர் நகராட்சிக்கு தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2022-2023 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,சேலம் அவர்களின்

செயல்முறைகள் கடிதம் செ.மு.ஆ.எண்.1656/2023/அ2, நாள்.01.03.2024ன்படி கீழ் கண்டுள்ள பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன்படி வார்டு எண்–2 குள்ளவீரன்பட்டி சாலைக்கு கான்கிரீட் சாலை அமைத்தல் பணி மதிப்பீட்டு தொகை ரூ.13.20/– இலட்சத்திலான பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது.

மேற்படி திட்டப்பணிக்கு 08.03.2024ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளி ஒப்பு நோக்கு பட்டியல் விவரம்.

| வ. எண் | முகவரி | விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Thangam & co, 34, Ramadas Nagar, Govindapadi. P.O,Mettur TK | (–) 0.30% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | Thiru. K.A. Kumar Contractor,Kunjandiyur, Gonur (P.O) Mettur Dam | (+) 0.29% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட பணிக்கு M/s.Thangam & co என்ற நிறுவனம் (–)0.30% மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதனை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.569/2024/இ1)

**தீர்மான எண்.537 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

7. மேட்டூர் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட கீழ் கண்டுள்ள பணிக்கு குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் மூலம் வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக ஆழ்துளை கிணறு பணிகளுக்கான பழுது பார்த்தல் மற்றும் மராமரத்து பணிகள் மதிப்பீட்டு தொகை ரூ.4.70/– இலட்சத்திலான பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது.

மேற்படி குடிநீர் பணிக்கு 08.03.2024ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளி ஒப்பு நோக்கு பட்டியல் விவரம்.

| வ. எண் | முகவரி | விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Sri Ganesh and Co 18/2, Sakthi theatre Street, Karumalaikoodal, Mettur Dam | (–) 0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/s.Juri Enterprises, No.4/63,Sri Nagar Colony, Omular Main Road | (+) 2.82% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட பணிக்கு M/s.Ganesh and Co என்ற நிறுவனம் (–)0.04% மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியதனை, ஏற்று பணி உத்தரவு வழங்கியதனை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணிகள் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1115/2023/இ1)
**தீர்மான எண்.538 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

8. மேட்டூர் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட கீழ் கண்டுள்ள பணிக்கு குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் மூலம் வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கான பழுது பார்த்தல் மற்றும் மராமரத்து பணிகள் மதிப்பீட்டு தொகை ரூ.5.00/- இலட்சத்திலான பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது.

மேற்படி குடிநீர் பணிக்கு 08.03.2024ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளி ஒப்பு நோக்கு பட்டியல் விவரம்.

| வ. எண் | முகவரி | விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Ganesh and Co 18/2, Sakthi theatre Street, Karumalaikoodal, Mettur Dam | (–) 0.18% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/s.Juri Enterprises, No.4/63,Sri Nagar Colony, Omular Main Road | (+) 8.21% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட பணிக்கு M/s.Ganesh and Co என்ற நிறுவனம் (–)0.18% மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியதனை ஏற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணிகள் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1115/2023/இ1)

**தீர்மான எண்.539 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

9. தூய்மை பாரதம் திட்டம் நகர்புற 2.0, 7-வது மாநில உயர்மட்ட குழுவின் ஆய்வு கூட்டம் நாள்.11.03.2024ல் தீர்மானத்தின்படி மேட்டூர் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2023-2024ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.6450/2024/SBM-1(1), நாள்.14.03.2024ன்படி கீழ் கண்டுள்ள தூய்மை இந்தியா திட்டப்பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| Sl.No | Name of the Work | No.of.Urinals | No.of. Seats | Total Urinal Cost (32000 per seat) |
|---|---|---|---|---|
| 1. | மேட்டூர் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் பயணளிகள் பயன்படுத்தும் வகையில் இலவச சிறுநீர் கழிப்பதற்கான கட்டமைப்பு பணி. | 1 | 2 | 0.64 |

எனவே, மேற்காணும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் மூலம் தூய்மை இந்தியா திட்டம் 2023-2024ன் கீழ் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதியினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.880/2024/இ1)

**தீர்மான எண்.540 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

**10.** சிறப்பு மானிய நிதி 2023-2024நிதியாண்டின் கீழ் மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டபணிகளால் சேதமடைந்த சாலைகளை சீரமைப்பு செய்திட சிப்பம் 1 முதல் 14 வரை உள்ள சாலை பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1256.99/-இலட்சத்திலான சாலை பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.16647/2022/SS1 நாள்.03.06.2023 நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. அவ்வாறு அனுமதிக்கப்பட்ட மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல செய்பொறியாளர், சேலம் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு கடித ந.க.எண்.2320/2022/பி1 நாள்.05.07.2023ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதன் படி பணிமேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தப்புள்ளி 31.08.2023 பெறப்பட்டு ஒப்பந்ததாரல் பணிமேற்கொள்ளபட்டு வருகிறது. அவ்வாறு மேற்கொள்ளுப்பட்டு வரும் சாலைகளில் கீழ்கண்டுள்ள இடங்களில் சாலை அமைக்கும் பணிமேற்கொள்ள இயலாத நிலை இருப்பதால் கீழ்கண்டுள்ள இடங்களில் உள்ள சாலை பணிகள் ரத்து செய்து உத்தரவு வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் அனுப்ப மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | சிப்பம் எண் | வார்டு எண் | சாலையின் பெயர் | காரணம் |
|---|---|---|---|---|
| 1. | 1 | 2 | Kullaveranpatty Boostar Station End to kolathour Mani road connecting road(047002R020) | அகலம் 2.50m நிலையில் உள்ளது. Paver வாகனம் போக இயலாது. |
| 2. | 8 | 11 | Indira nagar chelliyandiyamman kovil back side street (047011R198) | அகலம் 2.54m நிலையில் உள்ளது. Paver வாகனம் போக இயலாது. |
| 3. | 9 | 14 | Ponnagar west side 2nd street (047014R236) | செங்குத்தான நிலையில் மிகவும் மேடு பகுதியாக உள்ளது. |
| 4. | 9 | 14 | Keelkullaveeranpatty west side 3rd cross (047014 R238) | அகலம் 2.54m நிலையில் உள்ளது. Paver வாகனம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | போக இயலாது. |
| 5. | 9 | 15 | Nethaji nagar 1st cross to VPK nagar jointing road (047015R253) | அகலம் 2.54m நிலையில் உள்ளது. Paver வாகனம் போக இயலாது. |
| 6. | 10 | 15 | Karuppaiya moopanar nagar south side (047015R276) | அகலம் 2.03m நிலையில் உள்ளது. |
| 7. | 14 | 29 | MGR nagar 1st cross 2nd street (047029R433) | அகலம் 2.3m நிலையில் உள்ளது. |
| 8. | 11 | 21 | Periyannan gounder nagar 2nd cross (047022R341) | அகலம் 3.1m நிலையில் உள்ளது. |
| 9. | 14 | 29 | MGR nagar 1st street 1st cross road (047029R434) | அகலம் 2.5m நிலையில் உள்ளது. |
| 10. | 3 | 6 | Malco Gate Front side west side third cut(047006R091) | Paver வாகனம் போக இயலாது. |
| 11. | 5 | 8 | Thangamapuripattinam periyar nagar 4th street (047008R133) | அகலம் 2.5m நிலையில் உள்ளது. |
| 12. | 5 | 8 | Thangamapuripattinam periyar nagar 2th street (047008R141) | அகலம் 2.5m நிலையில் உள்ளது. |
| 13. | 6 | 9 | Salem camp Gandhi nagar mariyamman kovil west side 1st cross west side cut road (047009R164) | அகலம் 2.4m நிலையில் உள்ளது. . Paver வாகனம் போக இயலாது. |
| 14. | 1 | 1 | Keelkullaveeranpatty mariamman kovil back side (047001R004) | Court Case Pending. |

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் பதிவுசெய்யலாம்.

(ந.க.எண்.2103/2023/இ1)

**தீர்மான எண்.541 நாள்.16.07.2024**
**ஒத்திவைக்கப்பட்டது**

**11.** மேட்டூர் நகராட்சியில் மாதையன்குட்டை பகுதியில் எரிவாயு தகன மேடை இயக்கவும் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளவும் மேட்டூர் அமைதி அறக்கட்டளை பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.32 நாள் 28.03.2018–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு 9 ஆண்டுகளாக நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட எரிவாயு தகன மேடையை தற்சமயம் 3 ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் உள்ளதால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேலும் 3 ஆண்டுகளுக்கு புதுப்பித்து தருமாறு மேலும் கடந்த 9 ஆண்டுகளாக மேட்டூர் நகராட்சி நிர்வாகம் நிர்ணயம் செய்த **ரூ.3000/–** மட்டுமே இன்று வரை தகனத்திற்கு வசூலிக்கப்படுகிறது. எரிவாயு தகனமேடை என்கிற நிலையில் இருந்து LPG பயன்படுத்தும் படியாக மாற்றியமைக்கபட்ட எங்களது அறக்கட்டளை மூலம் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எங்களது பங்காளிப்புகாக **ரூ.25.00/– இலட்சம்** மேட்டூர்

நகராட்சிக்கு செலுத்தி சுமார் **ரூ.55.00/-** இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே இன்றைய பாராமரிப்பு கட்டணம், மின்சார கட்டணம் மற்றும் ஊழியர்கள் ஊதிய உயர்வுகளை கருத்தில் கொண்டு கட்டணத்தை **ரூ.5000/-** என நிர்ணயம் செய்து தர மேட்டூர் அமைதி அறக்கட்டளை என்ற தனியார் தொண்டு நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

எனவே மேட்டூர் அமைதி அறக்கட்டளை கடந்த 3 வருடங்களாக எரிவாயு தகனமேடை பராமரிக்கப்பட்டு நல்ல முறையில் இயக்கியும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றது.

மேலும் அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு எரிவாயு தகன மேடை பராமரிக்கவும் மற்றும் இயக்கவும் மேட்டூர் அமைதி அறக்கட்டளைக்கு 31.05.2024 முதல் நகராட்சி நிர்வாகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு புதுப்பித்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தகனத்திற்கான கட்டணத்தை உயர்த்த கோரியுள்ள விவரத்தினை குழுவின் நடவடிக்கைக்கு உட்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.9957/2006/இ1)

**தீர்மான எண்.542 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

**12.** 7-வது மாநில உயர்மட்ட ஆய்வு கூட்டத்தில் தூய்மை பாரதம் நகர்புற 2.0 திட்டம் 2023-2024ஆம் ஆண்டின் கீழ் மேட்டூர் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் பயணளிகள் பயன்படுத்தும் வகையில் இலவச சிறுநீர் கழிப்பதற்கான கட்டமைப்பு பணி மதிப்பீட்டு தொகை ரூ.0.64/- இலட்சத்திலான பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.6450/2024/SBM-1(1), நாள்.14.03.2024ன்படி நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 10.06.2024ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளி ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Lakshmi Construction. | (-) 0.27% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/s.KJS Construction. | (+) 1.80% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:-

பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.880/2024/இ1)

**தீர்மான எண்.543 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

**13.** 6-வது மாநில உயர்மட்ட ஆய்வு கூட்டத்தில் தூய்மை பாரதம் நகர்புற 2.0 திட்டத்தின் கீழ் மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4

காவேரி பாலம் அருகில் 2MT உரம் தயாரிக்கும் பணிக்கு நுண் உயிர் கூடம் (Constraction of 2TPD Micro Compost Center at Kavary palam Ward No.04 in Mettur Municipality.(T.S No.2/1 Black No.27 Ward-A) கட்டமைப்பு பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.27.00/- இலட்சத்திலான பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.6450/2024/SBM-1(2), நாள்.07.03.2024ன்படி நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 10.06.2024ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளி ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.VPM Projects, Salem. | (+) 20.77% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | Thiru.K.Govindan.Poosaripatti,Salem. | (-) 0.002% மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலக குறிப்பு:-

பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.908/2024/இ1)

**தீர்மான எண்.544 நாள்.16.07.2024**

**பதிவு செய்யப்பட்டது**

**14.** மேட்டூர் நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2020-2021 மற்றும் 2021-2022 நிதியாண்டின் (Tied& Untied Grant) கீழ் சீத்தாமலை புதிய குடிநீர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார் பம்ப்செட்கள் பராமரிப்பு மற்றும் தங்கமாபுரிபட்டிணம் பம்ப்ஹவுஸ் மோட்டார், பம்செட்கள் பராமரிப்பு மதிப்பீட்டு தொகை ரூ.47.50/- இலட்சத்திலான பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31114/2021/EA2, நாள்.23.02.2024-ல் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் கடிதம் ந.க.எண்.4026/2023/பி1, நாள்.26.02.2024 நிர்வாக அனுமதி வழங்கியதன்படி, நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், சேலம் அவர்கள் கடிதம் ந.க.எண். 4026/2023/பி1, நாள்.26.02.2024 தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்துபுள்ளி கோரப்பட்டது.

மேற்படி குடிநீர் திட்டப்பணிக்கு 08.03.2024ல் ஒப்பந்துபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்த நிறுவனங்கள் அளித்துள்ள ஒப்பந்துபுள்ளி ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் ,பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **முகவரி** | **விலைவிகிதம்** |
|---|---|---|
| 1. | M/s.Ganesh and Co 18/2, Sakthi theatre Street, Karumalaikoodal, Mettur Dam | (+) 0.28% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | M/s.Juri Enterprises, No.4/63,Sri Nagar Colony, Omular Main Road | (+) 4.66% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் பதிவுசெய்யலாம்.
2. மேற்படி பணி திட்டபணி என்பதால் மதிப்பீட்டை விட கூடுதலான தொகையில் பணி மேற்கொள்ள வழிவகை இல்லை என்பதால் விலை குறைப்பு செய்து தர கோரி கடிதம் அனுப்பி (–) 0.04% மதிப்பீட்டை விட குறைந்த விலையில் பணி செய்ய சம்மதித்து M/s.Ganesh and Co என்ற நிறுவனம் கடிதம் அளித்துள்ளதை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் பதிவுசெய்யலாம்.

(ந.க.எண்.5698/2023/இ1)

**தீர்மான எண்.545 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

15. மேட்டூர் நகராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு சுகாதார முறையில் குடிநீர் விநியோகம் செய்ய நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் குடிநீர் பணிக்கு தேவையான 900கிலோ கொள்ளளவு கொண்ட லிக்யூட் குளோரின் சிலிண்டர் 2024–2025ஆம் ஆண்டு கொள்முதல் செய்ய அதற்கான தோரயச் செலவினம் தொகை ரூ.5.00/– இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1484/2020/இ1)**

**தீர்மான எண்.546 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

**16.** துணை இயக்குனர் , சுகாதாரப்பணிகள் , சேலம் அவர்களின் கடிதத்தில் சேலம் மாவட்டத்தில் டெங்கு கொசுப்புழு வளர் நிலைகள் அதிகரித்து வருகிறது எனவும் மழைக் காலங்களில் டெங்கு காய்ச்சல் பரவாமலும் அதிகரிக்காமலும் தடுக்கவும் , டெங்கு கொசுப்புழு தடுப்பு பணி செய்து கட்டுப்படுத்தும் பணிக்காக ஜனவரி 2024 மாதத்திலிருந்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தற்பொழுது பறவைகள் பூச்சிகளால் பரவக்கூடிய மலேரியா, டெங்கு, சிக்கன் குனியா, போன்ற நோய்கள் பரவாமல் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் , தற்காலிகமாக 30 களப்பணி பணியாளர்களின் மூலம் பணியாற்ற தெரிவிக்கப்பட்டுள்ளது . ஏற்கனவே நவரத்தினம் சுய உதவிக்குழு மூலம் கொசுப்புழு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . இக்குழு 31.3.2024 ம் தேதியுடன் அனுமதி முடிவடைகிறது . இந்தகுழு மூலம் தொடர்ந்து பணிகளை நடைமுறைப்படுத்த அவசர அவசியம் கருதியும் , டெங்கு நோய் பரவாமல் தடுக்கவும் , களப்பணியாளர் , நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் , சேலம் அவர்களால் 2023– 2024 ஆம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.450/ – வீதத்தில் 30 களப்பணியாளர்களை தற்பொழுது டெங்கு தடுப்பு பணி செய்து வரும் நவரத்தினம் சுய உதவிக்குழு மூலம் 1.4.2024 முதல் 31.3.2025 முடிய ஒராண்டிற்கு டெங்கு தடுப்பு பணி மேற்கொள்ளலாம் எனவும் துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர் தனது

31.3.2024 ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளனர். எனவே 30 பணியாளர்களை நவரத்தினம் சுய உதவிக்குழு மூலம் 1.4.2024 முதல் 30.08.2024 முடிய ஐந்து மாதத்திற்கு டெங்கு தடுப்பு பணிக்கு பயன்படுத்திக்கொள்ளவும் அதற்காகும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதியும் 2024 பாராளமன்ற நன்னடத்தை விதி அமலில் இருப்பதாலும் தொடர்ந்து மேற்படி பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை செய்தமைக்கு மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம் .

(ந.க.எண்.1431/2020/எச்1)

**தீர்மான எண்.547 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

17. இந்நகராட்சியின் 2015–2016 ஆம் ஆண்டு வருவாய் நிதி பத்தி தணிக்கை அறிக்கை எண் 59– ல் கீழ் காணும் 1 முதல் 11 வரையிலான ஒப்பந்ததாரர்களுக்கு காலங்கடந்த வைப்புத்தொகை நகர்மன்ற அனுமதி பெறாமல் வழங்கப்பட்டமைக்கு தணிக்கை தடை எழுப்பட்டுள்ளது. மேற்காண் தணிக்கை தடையை நிவர்த்தி செய்ய உயர்மட்ட குழுவிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

| வ எண் | வைப்பு பதிவேடு பக்கம் எண் | செ. சீ.எண்/ நாள் | ஒப் பந்ததாரர் விபரம் | வழங்கிய விபரம் செ. சீ.எண்/ நா:ள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | VOL– I ,P 1 | 700750/ 08.05.2007 | ஜி. கலைவாணன் | 10449/20.1.2015 | 4900 |
| 2 | VOL– I P 19 | 802191/ 26.08.2006 | ஜி. கலைவாணன் | 10450/20.10.2015 | 1750 |
| 3 | VOL– I P 36 | 96094/ 17.09.2009 | ஜி. கலைவாணன் | 10475/05.11.2015 | 1750 |
| 4 | VOL– I I, P 1 | 93094/ 12.6.2009 | எம். ராமசாமி | 10367/ 02.09.2015 | 6000 |
| 5 | VOL– I I, P 1 | CJN /14.012.2010 | எம். ராமசாமி | 10360/ 02.09.2015 | 1900 |
| 6 | VOL– I I, P 1 | 2010–2011 | ஜி. ராஜா | 10825/ 21.03.2016 | 13736 |
| 7 | VOL– I I, P 1 | 10020/ 03.08.2011 | எம். ராமசாமி | 10369/ 02.09.2015 | 1250 |
| 8 | VOL –I I, P 1 | 10058/ 15.02.2012 | எம். ராமசாமி | 10370/ 02.09.2015 | 6000 |
| 9 | VOL– I I, P 1 | 13005/ 02.05.2012 | எம். ராமசாமி | 10371/ 02.09.2015 | 3000 |
| 10 | VOL– I I, P 1 | 12043/ 09.11.2012 | பௌணாம்பாள் | 10827/ 21.03.2016 | 8000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | VOL– I I, P 1 | – | எம். ராமசாமி | 10634/23.12.2015 | 10000 |
| **மொத்தம்** | | | | | **58286** |

வரிசை எண் 1 முதல் 11 தெரிவிக்கப்பட்ட காலம்கடந்த வைப்புத்தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கும் பொருட்டு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 795/2023/பி2 )**

**தீர்மான எண்.548 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

**18.** மேட்டூர் நகராட்சி பகுதியான வார்டு 1 முதல் 30 வார்டுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளிலிருந்து தரம் பிரிக்கப்பட்டு மறுசுழற்சிக்கு பயன்படாத பொருட்கள் பிளாஸ்டிக் , டயர் , செப்பல் , துணி ஆகியவைகள் கடந்த இரண்டு வருடகாலமாக திடக்கழிவு மையத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது . இவைகளை சங்ககிரியில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைக்கு தனியார் வாகனம் மூலம் கொண்டு செல்ல வேண்டி உள்ளதால் அதற்கான வாடகை கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதால் தோராய செலவினமாக ரூ:50,000/–வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு :

1. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .

( ந.க.எண் . 1951/2024/எச் 1)

**தீர்மான எண்.549 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

**19.** மேட்டூர், புகைவண்டி நிலையம் அருகில் உள்ள வணிக வளாகம் கடை எண் 4–யை ஏலம்/ ஒப்பந்தபுள்ளியில் கலந்துகொண்டு திரு. G. முரளிதரன் என்பவர் கடையை எடுத்து மேட்டூர் ஆட்டோமொபைல்ஸ் என்ற பெயரில் 2008 முதல் 2017 வரை நடத்தி வந்தார். கடையை தொடர்ந்து நடத்த முடியாத காரணத்தால் வாடகை முழுவதும் செலுத்தி நகராட்சியின் வசம் ஒப்படைப்பு செய்துள்ளார். த'ற்போது திரு G. முரளிதரன் பெயரில் கிழ்கண்ட காலங்களில் செலுத்திய வைப்புத்தொகையை திரும்ப வழங்க கோரி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

| **வ எண்** | **செலுத்திய வைப்புத்தொகை** | **சரிகட்டிய தொகை (ம) பதிவேடு விபரம்** | **மீதி தொகை (ம) பதிவேடு விபரம்** |
|---|---|---|---|
| 1, | ரூ 50,000 /–<br>DD no: 29965, Date 05.04.2007. | ரூ 6238 /–<br>4018– 2016–17 – page– 24. | 37,362 /–<br>4018– 2023–2024 page 16/5 |

| | | | |
|---|---|---|---|
| | | ரூ 6400 /– 4018 – 2018–19 page –54. | |
| 2, | ரூ 2610 /– இரசிது எண் : 705959. 23.01.2008 | ரூ 2610/– 4018– 2011–12 page– 28. | – |
| 3, | ரூ 15840/– இரசிது எண் : 700615. 27.04.2007 | ரூ 4464 /– 4018– 2011–12 page–17 ரூ 6814 /– 4018 –2012–13 page 18 | ரூ 4562 /– 4018 – 2023–24 page 15/6 |
| 4, | ரூ 6814/– இரசிது எண் : 1303218. 12.07.2013 | – | ரூ 6814/– 4018–2023–24 page 46/8 |
| 5, | ரூ 5424/– 047/01/17–18/0007989 , 07.06.2017 | – | ரூ 5424/– 4018–2023–24 page 70/32 |
| 6, | ரூ 814 /– 047/01/17–18/0007990 , 07.06.2017 | – | ரூ 814 /– 4018–2023–24 page 70/33 |
| 7, | ரூ 2200 /– இரசிது எண் : 800841. 26.06.2008 | – | ரூ 2200 /– 4020– 2023–24 page 5/5 |
| மொத்தம் | | | ரூ 57176 /– |
| தொழில் வரி நிலுவை பிடித்தம் , வரி விதிப்பு எண்; 047/1176. | | | ரூ 2560 /– |
| மீதி | | | **ரூ 54616/–** |

திரு. G. முரளிதரன் என்பவர் தற்போது காலமாகிவிட்ட காரணத்தால் அவரது வாரிசுதாரராகிய அன்னாரின் தாயார் G . சரோஜா என்பவர் வழங்க கோரியுள்ளார், எனவே மேற்கண்ட காலம்கடந்த வைப்புத்தொகை ரூ 54616 /– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.136/2024/பி2)**

**தீர்மான எண்.550 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

**20.** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு தடுப்பு மற்றும் சுகாதாரப் பணிகளுக்கு தேவைப்படும் பிளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்புதூள் கொள்முதல் செய்ய (without GST ) இந்நகர்மன்ற தீர்மானம் எண்448 நாள் 07.02.2024 ல் அனுமதி பெற்று ரூ 80000 /– மதிப்பீட்டில் விலைப்புள்ளி கோரியதில் 14.03.2024 ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது .

| வஎண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | Sri kaliyamman Trading Corporation 60/101–A 1B | ரூ 58000 |

| | | |
|---|---|---|
| | R.NO.6 , R.S Building ,Kulakkarai Street , Kamaraj Nagar Namakkal | |
| 2 | Sri Akshaya Traders 4/10 East Sarayapattarai Street Woraiyur Trichy | ரூ 65000 |
| 3 | Sri Athanur Amman Traders 1/34 Kalappanaickenpatty (po) Sendamangalam (tk) Namakkal | ரூ 68000 |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையை விட குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள Sri Kaliyamman Trading Corporation 60/101-A 1B R.NO.6 , R.S Building ,Kulakkarai Street , Kamaraj Nagar Namakkal விலைப்புள்ளிதாரரது விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம் .

(ந. க.எண் : 3912/2023/எச் 1)

**தீர்மான எண்.551 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

21. மேட்டூர் நகராட்சி தென்மேற்கு பருவ மழை 2024 ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புகை மருந்து அடிக்கும் கிருமி Mini Fogging Machine –ன் Indoor fogging 4 எண்ணிக்கை தேவைப்படுவதால் மழைக்காலம் முன்னீட்டு அவசர அவசியம் கருதி வாங்கி பயன்படுத்திக்கொள்ள அதற்கான தோராயன செலவினம் ரூ : 2 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு .

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1986/2024/எச்1)

**தீர்மான எண்.552 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

**22.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ,ந.க.எண்.34638/2022/EA2-SWM-2, நாள்.10.01.2023 ஆணையின்படி, இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.2412/2021/எச்1, நாள்.09.05.2023-ல், மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தேவையான தூய்மை பணியாளர்கள், தளவாடச் சாமானங்கள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்தி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து வாங்கி நகராட்சி உரமாக்கும் மையம், மறு சுழற்சி மையம் மற்றும் கழிவு வளம் மீட்பு மையம் ஆகிய இடங்களுக்கு கொண்டு சேர்த்தல் பணிக்கு ஒருடன்னிற்கு ரூ.4004/-என்ற விலை விகிதத்தின் அடிப்படையில் 10.05.2023 முதல் 09.05.2024 முடிய ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணி செய்ய M/s.BIO GREEN MAN POWER SOLUTION என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்காணும் ஒப்பந்த காலம் 09.05.2024 உடன் முடிவடைவதால் M/s.BIO GREEN MAN POWER SOLUTION நிறவனம் தனது 15.04.2024 ம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே வழங்கி வரும் தொகையில் 10 சதவீதம் கூடுதலாக சேர்த்து மேலும் ஓராண்டிற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து தரக்கோரியுள்ளார். 16.032024 முதல் 06.06.2024 வரை நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி M/s.BIO GREEN MAN POWER SOLUTION நிறுவனம் தொடர்ந்து பணி செய்து வருகின்றனர். எனவே, 10.05.2024 முதல் 09.08.2024 முடிய மூன்று மாதங்களுக்கு மட்டும் ஒருடன்னிற்கு

ரூ.4004/-என்ற முந்தைய விலை விகிதத்திலேயேM/s.BIO GREEN MAN POWER SOLUTION நிறுவனம் மூலம் பணியினை மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(ந.க.எண். 2412/2021/எச்1 )

**தீர்மான எண்.553 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

**23.** அரசாணை (நிலை) எண் 166 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAWS) துறை , நாள் 23.11.2016 ன் படி அரசு நகராட்சி தொடக்கப்பள்ளி , நடுநிலைப்பள்ளி ,உயர்நிலைப்பள்ளி , மேல்நிலைப்பள்ளி , ஆகிய பள்ளிகளில் உள்ள கழிவறை சுத்தம் செய்யும் பணி , பள்ளி வளாகம் முழுவதும் சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும் , அதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களால் வருடந்தோறும் நிர்ணயிக்கும் மாவட்ட சந்தை விகிதசாரப்படி , தனியார் துறை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியில் அமர்த்தி கொள்ளவும் , அதற்கான செலவு தொகை மற்றும் மேற்கண்ட அனைத்து தூய்மைபணிகள் மேற்கொள்ள தேவையான தளவாட சாமான்கள் , கிருமி நாசினி மருந்துகள் மற்றும் பவுடர்கள் வாங்கி வழங்கவும் ,அதற்காக ஆகும் செலவின தொகையினை அந்தந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும் கல்வி வரியின் (EDUCATION CESS) மூலம் மேற்கொள்ளவும் , அறிவுரைகள் வழங்கப்பட்டது.மேற்காணும் அறிவுரைகளின்படி ,மேட்டூர் நகராட்சிக்கு உட்பட்ட 7 எண்ணிக்கை அரசு/நகராட்சி பள்ளிகளில் , பள்ளியின் அனைத்து அறைகளும் , கழிப்பறைகள் , சிறுநீர் கழிப்பறைகள் மற்றும் பள்ளியின் சுற்றுப்புற வளாக பகுதிகள் முழுவதும் (HOUSE KEEPING ACTIVITIES OF THE SCHOOL) சுத்தம் செய்ய 12 பணியாளர்களை ஈடுபடுத்தி கொள்ளவும் , அதற்காக நபர் 1 க்கு நாள் 1 க்கு ரூ .457 /- வீதம் , திரு . கே. கோவிந்தன் ஒப்பந்ததாரர் ஓமலூர் என்பவர்க்கு 01.01.2024 முதல் 30.06.2024 முடிய ஆறு மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு , மேற்காணும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணிக்கான ஒப்பந்தகாலம் 30.6.2024 ந் தேதியுடன் முடிவடைகிறது . தற்பொழுது பணிகளை மேற்கொண்டுவரும் ஒப்பந்ததாரரான திரு.கே. கோவிந்தன் என்பவர் 19.06.2024 ந் தேதிய கடிதத்தில் பணி நீட்டிப்பு செய்து தருமாறும் கேட்டுள்ளார் . எனவே 2019-2020 , 2020- 2021 மற்றும் 2021-2022 ம் ஆண்டு வழங்கப்பட்ட ஒப்பந்த புள்ளி தொகைக்கும் மற்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் திரு.கே. கோவிந்தன் , பூசாரிபட்டி , ஓமலூர் அவர்களுக்கு 01.07.2024 முதல் 31.12.2024 முடிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து

உத்திரவு வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ8.20 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.இதற்காகும் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2248/2019/எச்1)

**தீர்மான எண்.554 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

24. இந்நகராட்சியில் பொதுபிரிவு மற்றும் அலுவலகத்திற்கு தேவையான பொருட்கள், அவ்வப்போது எற்படும் சிறுசிறு செலவினங்கள் மேற்கொள்ள அதற்கான செலவினப்பட்டியல்களுக்கு தொகை வழங்க அவசர அவசியம் கருத்தில் கொண்டு இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து தொகை வழங்க தோராய செலவினம் ரூ 50,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(ந.க.எண். 2056/2024/பி2)</u>

**தீர்மான எண்.555 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

25. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9084/2024/பி1 நாள்.25.04.2024.ன்படி, கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024-2025ஆம் நிதியாண்டின் கீழ் மேட்டூர் நகராட்சிக்கு புதிய நவீன வணிக வளாகம் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகைரூ.1200.00 இலட்சத்திற்கான பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சமர்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தினை நான்கு இடங்களில் மேற்கொள்ளவும், தற்பொழுது முதலில் மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12ல் புதிய பேருந்து நிலையம் (வார்டு -A, பிளாக் எண்-45, நகர புல எண்.9) என்ற இடத்தின் அருகில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024-2025ஆம் நிதியாண்டின் கீழ் புதிய நவீன வணிக வளாகம் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.375.00/- இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்யும் பணியினை தனியார் கலந்தலோசகர் (Private Consultant) நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள அதற்கான தோராயச் செலவினம் தொகை ரூ.7,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3154/2023/இ1)

**தீர்மான எண்.556 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

26. மேட்டூர் நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் மூலதன நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான காவேரி பாலம் புதிய நீரேற்று நிலையத்தின் குடிநீர் பராமரிப்பு மற்றும் விநியோகம் பணி தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அதற்கான மதிப்பீட்டு தொகை.11.65/– இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.484 நாள்.08.03.2024ல் அனுமதிக்கப்பட்டதன்படி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மேற்படி பணி ஜீலை 2024–ல் முடிவடைக்கிறது. தற்பொழுது இப்பணியினை மேற்கொள்ள நகராட்சியில் போதுமான பணியாட்கள் இல்லாத காரணத்தினால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்வதன் அவசியத்தினை கருதி குடிநீர் பராமரிப்பு மற்றும் விநியோகம் பணி தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அதற்கான தோராய மதிப்பீட்டு தொகை.11.65/– இலட்சத்திலான செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி குடிநீர் பணிகளுக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் மூலதன நிதியில் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 155/2024/இ1)

**தீர்மான எண்.557 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

27. மேட்டூர் நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் மூலதன நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான சீதாமலை பழைய நீரேற்று நிலையத்தின் குடிநீர் பராமரிப்பு மற்றும் விநியோகம் பணி தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அதற்கான மதிப்பீட்டு தொகை.11.90/– இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.483 நாள்.08.03.2024ல் அனுமதிக்கப்பட்டதன்படி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மேற்படி பணி ஜீலை 2024–ல் முடிவடைக்கிறது. தற்பொழுது இப்பணியினை மேற்கொள்ள நகராட்சியில் போதுமான பணியாட்கள் இல்லாத காரணத்தினால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்வதன்

அவசியத்தினை கருதி குடிநீர் பராமரிப்பு மற்றும் விநியோகம் பணி தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அதற்கான தோராய மதிப்பீட்டு தொகை.11.90/– இலட்சத்திலான செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி குடிநீர் பணிகளுக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் மூலதன நிதியில் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 156/2024/இ1)

**தீர்மான எண்.558 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

28. மேட்டூர் பேருந்து நிலையத்தில் இந்நகராட்சிக்குட்பட்ட கட்டணக்கழிப்பிடத்தை திரு. K.குருசாமி / காவேரிகவுண்டர், என்பவர் 20.01.2022 முதல் 31.03.2024 வரை குத்தகைக்கு எடுத்து நடத்திவந்துள்ளார். தற்போது பேருந்து நிலையம் புதுபிப்பது காரணமாக 31.07.2023 முதல் காலி செய்துவிட்டார், அவர் குத்தகைக்காக செலுத்தப்பட்ட தொகை ரூ 6,50,000/– யில் சரிகட்டிய தொகை ரூ2,09,751/– போக மீதி ரூ 4,40,249/– வழங்க கோரியுள்ளார், எனவே மேற்கண்ட காலம்கடந்த வைப்புத்தொகை ரூ 4,40,249/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2969/2023/பி2 )**

**தீர்மான எண்.559 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

29. மாவட்ட ஆட்சி தலைவர் சேலம் அவர்களின் செயல்முறை கடிதம் கோப்பு எண்.273/அ3/2021 நாள்.02.07.2021ல் கண்டுள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன்படி, மேட்டூர் நகராட்சி வார்டு எண்.5 சேலம் கேம்ப் வடக்கு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் உள்ள பழைய அங்கன்வாடி மையம் பழுது மற்றும் பராமரிப்பு பணி அமைக்கு பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.01.2023ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளி ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s. Sri Sivasakthi Vinayaka Construction | (–) 0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | Thiru.K.Govindan | (+) 2.09% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:–

1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதியும் அங்கன்வாடி குழந்தைகள் நலன் கருதியும் நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2108/2021/இ1)

**தீர்மான எண்.560 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

30. இந்நகராட்சியிலிருந்து வெளியூர்களுக்கு அஞ்சல் கடிதங்கள் அனுப்புவதற்கு அஞ்சல் வில்லைகள் தேவைப்படுகிறது. எனவே 2024-2025ஆம் ஆண்டுக்கு அஞ்சல்வில்லைகள் வாங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம்அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1172/2018/டி1 )

**தீர்மான எண்.561 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

**31.** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட அணை முனியப்பன் கோவில், மேட்டூர் அணை பூங்கா மற்றும் காவேரி கரையோர பகுதிகளில் ஆடி 18 முன்னிட்டு, புனிதநீராட அருகில் உள்ள மாவட்டங்களில் உள்ள பொதுமக்கள் சுமார் 100000 பேர் வருகை புரிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே ஆடி 18 பண்டிகைக்கு புனித நீராட வரும் பொதுமக்கள் உடை மாற்ற ஏதுவாக தடுப்புகள், நீரோட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் நீராட தடை செய்ய தடுப்புகள், எச்சரிக்கை பதாகைகள், காவேரி பாலம் முதல் முனியப்பன் கோவில் வரை FOCUS மற்றும் FLOOD LIGHT பொருத்த வேண்டிய அவசியம் உள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.5.00/-இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2303/2023/இ1)

**தீர்மான எண்.562 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

32. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31114/2021/EA2, நாள்.23.02.2024ன்படி, மேட்டூர் நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2020-2021ம் ஆண்டு (Tied Grant)-ல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதன்படி கீழ்கண்டுள்ள பணி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டுள்ள நிலையிலேயே உள்ளதாக தெவிக்கப்பட்டது. அப்பணியின் விவரம் கீழ் கண்டுள்ளவாறு.

| வ.எண் | பணிகள் விவரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | மேட்டூர் நகராட்சி வார்டு எண்.26–ல் உள்ள பிள்ளையார் கோவில் தெரு சமுதாய கழிப்பிடம் பராமரித்தல் பணி. | 3.00 |
| 2. | மேட்டூர் நகராட்சியில் பிட்டர்மேன் குடியிருப்பு மற்றும் கூலிலைன் பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தின் தொட்டி அமைத்தல் பணி. | 14.80 |
| | மொத்தம்= | 17.8 |

மேற்கண்ட இரு பணிகள் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2020–2021ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் ஒப்பந்ததாரரால் பணி முடிக்கமால் நாளது தேதி வரை நிலுவையாக இருப்பதால் திட்டத்தின் அவசரம் அசியம் கருதி மேற்காணும் இரு பணிகளை ரத்து செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3858/2021/இ1)

**தீர்மான எண்.563 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

33. மேட்டூர்நகராட்சி– பொதுசுகாதாரப்பிரிவில்– இயங்கிவரும் LCV TN 93F9484 வாகனம் (ஆயில் சர்வீஸ் மற்றும் சென்சார் பழுது)நீக்கம் செய்தமைக்கான பில் பட்டியல் வரப்பெற்று தொகை ரூ.4140/– ஐ LRN MOTORS Pvt Ltd அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலககுறிப்பு :**

மன்றம்அனுமதிக்கலாம்

(ந.க.எண்:1791/2024/எச்1

**தீர்மான எண்.564 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

34. இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள 42 மாமரங்கள் 3 நாவல் மரங்களின் பழங்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம், **3.07.2024**ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு ஒரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (பிரதி மாத வாடகை) |
|---|---|---|
| 1. | திருமதி பூஜா த.பெ விஜயன்<br>59/42, பாரதி நகர்<br>மேட்டூர் ஆர் எஸ் | ரூ.16905 |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படிமேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள 42 மாமரங்கள் 3 நாவல் மரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம், ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி பூஜா

த.பெ விஜயன் மேட்டூர் அணை ஆர் எஸ் என்பவர் அதிகபட்சமாக ரூ.16905/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்இனத்திற்க்கு 2019–2020 ஆம் ஆண்டு உரிமதொகை ரூ47656 / ஆகும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ45236/ ஆகும். இது 2019–2020 ஆம் ஆண்டு தொகையைவிட ரூ 30751 / குறைவாகும் மூன்றாண்டு சராசரியை விட 28331 /–குறைவாகும். மேலும் இவ்வினத்திற்க்கான ஒப்பந்தப்புள்ளி எவரும் கோர முன்வரவில்லை. ஒருநபர் மட்டுமே கலந்து கொண்டார். இவ்வொந்தப்புள்ளியை ஏற்க இயலாது.

**(ந.க.எண்.3636/2020/அ2)**
**தீர்மான எண்.565 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

35. இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள தென்னைமரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம், 3.07.2024ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு ஒரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (பிரதி மாத வாடகை) |
|---|---|---|
| 1. | திருமதி பூஜா த.பெ விஜயன்<br>59/42, பாரதி நகர்<br>மேட்டூர் ஆர் எஸ் | ரூ.196600 |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள தென்னை மரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம், ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி பூஜா த.பெ விஜயன் மேட்டூர் அணை ஆர் எஸ் என்பவர் அதிகபட்சமாக ரூ.196600/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்க்கு 2020–2021 ஆம் ஆண்டு உரிமதொகை ரூ.194867 /–ஆகும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.185735/ ஆகும் இது 2020–2021ஆம் ஆண்டு தொகையைவிட ரூ 1733/– அதிகமாகும் மூன்றாண்டு சராசரியை விட 9132 /அதிகமாகும். மேலும் இவ்வினத்திற்க்கு ஒப்பந்தபுள்ளி கோர எவரும் முன்வரவில்லை மேற்கண்ட நபர் மட்டும் கலந்துகொண்டார். இவ்ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்க இயலாது.

**(ந.க.எண்.3636/2020/அ2)**
**தீர்மான எண்.566 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

**36.** பாராளுமன்ற பொதுதேர்தல் 2024 நடைபெறுவதால் மேட்டூர் நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் உள்ள வாக்குசாவடிகளை ஆய்வு செய்து குறைகளை சரிசெய்து அறிக்கை சமர்பிக்க தேர்தல் நடத்தும் அலுவலர் (85) மேட்டூர் சட்டமன்ற தொகுதி மற்றும் சார் ஆட்சியர் மேட்டூர் அவர்களின் அலுவலக கடித ந.க.எண்.639/2024/அ3 நாள். 03.03.2024ல் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, இந்நகராட்சி உதவிபொறியாளர் வாக்குசாவடிகளை ஆய்வு செய்து அளித்துள்ள குறிப்பின்படி வாக்குசாவடிக்கு சாமியான பந்தல், நாற்காலி, குடிநீர், மின்விசிறி மேற்கொள்ள ஆகும்

உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.60/-இலட்சத்திலான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பாராளுமன்ற பொதுதேர்தல் 2024 -க்கான தேர்தல் பணியின் அவசரம் அவசியம் கருதி பணிமேற்கொண்டதையும் மற்றும் செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1056/2024/இ1)

**தீர்மான எண்.567 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

**37. மேட்டூர் நகராட்சியின் 2023-2024ம் நிதியாண்டிற்கான ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் பணிக்கான (வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி) விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய மு.அம்பேத்கார் நிறுவனத்தின் மூலம் 2023-2024ம் நிதியாண்டிற்கான ஆண்டு கணக்குகள் தயாரிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.120000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

| வ எண் | விலைப்புள்ளி பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | மு.அம்பேத்கார்<br>106,4வது தெரு,<br>அண்ணா நகர்,<br>வாழப்பாடி, சேலம் | 120000 |
| 2 | ஆர்.மணிவண்ணன்<br>சுப்ராயன் தெரு,<br>வாழப்பாடி, சேலம் | 125000 |
| 3 | அ.ஆசைத்தம்பி<br>மெயின் ரோடு<br>பிஎன்பட்டி<br>மேட்டூர், சேலம் | 130000 |

**அலுவலக குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.795/2023/பி1)**

**தீர்மான எண்.568 நாள்.16.07.2024**
**அனுமதிக்கப்பட்டது**

**38.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.6450/2024/SBM-1(2), நாள்.07.03.2024ன்படி மேட்டூர் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2023-2024 நிதியாண்டில் கீழ் கண்டுள்ள திட்டப்பணிக்கு நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதற்கு இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 529, நாள்.08.03.2024-ல் அனுமதிக்கப்பட்டதன்படி கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது.

| வ. எண் | பணி விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 காவேரி பாலம் அருகில் தூய்மை இந்தியா | 27.00 |

| | | |
|---|---|---|
| | திட்டத்தின் கீழ் 2MT உரம் தயாரிக்கும் பணிக்கு நுண் உயிர் கூடம் அமைத்தல் பணி | |

மேற்படி, பணியினை மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்ட இடத்தில் பணிமேற்கொள்ள கூடாது என அப்பகுதி பொதுமக்கள் மற்றும் கட்சிகளின் நிர்வாகிகள் ஆட்சேபணை தெரிவித்து மறியலில் ஈடுபட்டதானல் அமைதி குழு கூட்டம் நகராட்சியில் 09.07.2024–க்கு அன்று நடைபெற்றது கூட்டத்தில் பல்வேறு கட்சிகள் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் வழக்கறிஞர் அப்பகுதி ஊர்பொதுமக்கள் சார்பாக கருத்துகளை தெரிவிக்கப்பட்டதன்படி, மேற்கண்ட இடத்திற்கு பதிலாக கீழ்கண்ட மாற்று இடத்தில் திட்டபணியினை செயல்படுத்த ஏகமனதாக கோரிக்கை விடுக்கப்பட்டது.

| வ. எண் | பணி விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்கார் தோட்டம், கோம்புரன்காடு பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2MT உரம் தயாரிக்கும் பணிக்கு நுண் உயிர் கூடம் அமைத்தல் பணி | 27.00 |

மேற்படி திட்டபணியினை மாற்று இடத்தில் அமைக்க நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று மேற்காணும் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் மூலம் தூய்மை இந்தியா திட்டம் 2023–2024ன் கீழ் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கியதை திருத்திய இடத்திற்கான ஒப்புதல் பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. திட்டப்பணி அவசர அவசியம் கருதி வார்டு எண்.4ல் மேற்கொள்ள பணியினை பொதுமக்கள் ஆட்சேபாணை தெரிவித்தனால் மாற்று இடம் தேர்வு செய்யப்பட்ட இடத்தில் பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.908/2024/இ1)

**தீர்மான எண்.569 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

**39.** இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள தென்னைமரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம், **10.07.2024**ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (பிரதி மாத வாடகை) |
|---|---|---|
| 1. | திருமதி பூஜா த.பெ விஜயன்<br>59/42, பாரதி நகர்<br>மேட்டூர் ஆர் எஸ் | ரூ.196600/- |
| 2 | திருமதி.மதிவதனி<br>8/86ஏ5, ராஜகணபதி நகர்<br>மேட்டூர் அணை | ரூ.195400/– |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள தென்னை மரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம், ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி பூஜா த.பெ விஜயன் மேட்டூர் அணை ஆர் எஸ் என்பவர் அதிகபட்சமாக ரூ.196600/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்க்கு **2020–2021** ஆம் ஆண்டு உரிமதொகை ரூ.**194867 /–**ஆகும் மூன்றாண்டு சராசரி

தொகை ரூ.185735/ ஆகும் இது 2020–2021ஆம் ஆண்டு தொகையைவிட ரூ 1733/– அதிகமாகும் மூன்றாண்டு சராசரியை விட 9132 /–அதிகமாகும். எனவே இவ்ஒப்பந்தப்புள்ளியையும் மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**

**தீர்மான எண்.570 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**

**40.** சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை) சட்டம் 2014 (மத்திய சட்டம் எண்7/2014) 37வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை) விதிகள் 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள்(வாழ்வாதார பாதுகாப்பு விற்பனை ஒழுங்கு முறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம் 2015ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் மேட்டூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள்(வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை) துணை விதிகள் 2024ல் மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) மேட்டூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2024ன் தெரிவித்துள்ளவாறு நகர விற்பனை குழு அமைப்பதற்கு மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும் , தேர்தல் நடத்துதல் மற்றும் தேர்தல் தொடர்பான அறிவிப்பினை தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்வதற்கும் வாக்காளர் பட்டியல் தயாரித்து வெளியிடுதல் ஆகிய அனைத்து பணிகளையும், மேற்கொள்ள இத்திட்டத்தில் இருந்து வழங்கப்படும் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2179/2024/எப்1 )**

**தீர்மான எண்.571 நாள்.16.07.2024**

**அனுமதிக்கப்பட்டது**